# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): மே 2019

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **ஜுலை 12, 2019**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 மே மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) வெளியிடப்பட்டது. 2019ஆம் ஆண்டு மே மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.4% இனால் அதிகரித்துள்ளது. இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2019 மே மற்றும் 2018 மே மாதங்களில் முறையே 106.1 மற்றும் 105.7 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| **மாதம்/ ஆண்டு** | **சுட்டெண் பெறுமதி** |
|---|---|
| மே - 2019 | 106.1 |
| மே - 2018 | 105.7 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) 0.4 | |

உற்பத்திக் கைத்தொழில் துறைகளில் 20 தொழில் நிறுவனங்களில் 10 உற்பத்திகளின் உற்பத்தயில் சாதகமான வளர்ச்சி பதிவாகியுள்ளது. 2018 மே மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2019 மே மாதத்திற்கான 'மின் உபகரண உற்பத்திகள்', 'கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்' மற்றும் 'இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள்' என்பனவற்றில் முறையே 19.8%, 17.0% மற்றும் 16.9% என குறிப்பிடக்கூடிய அதிகரிப்புப் பதிவாகியுள்ளது. மேலதிகமாக, உணவு உற்பத்திக் கைத்தொழில் 2018 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 மே மாதம் 5.6% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

கைத்தொழில் துறையின் உற்பத்தியின் அளவு மொத்தம் 10 கைத்தொழில்களில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது: 'கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்', 'ஏனைய உற்பத்திகள்' (மோட்டார் வாகன உற்பத்தி, ஏனைய போக்குவரத்து சாதனங்கள், 'பார ஊர்திகள்' மற்றும் 'ஆபரணங்கள்' என்பன அடங்கும்), 'மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள்' என்பன முறையே 43.7%, 36.0% மற்றும் 19.1% வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

2019ஆம் ஆண்டின் மே மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.